மாலை முரசு

பக்கங்கள் 16+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 09 வெள்ளிக்கிழமை 21.02.2025 | அதிர்வு 205

## இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை

### தென்னிலங்கையில் தொடரும் பயங்கரம்



கம்பஹா மாவட்டம், ஜா – எல, உஸ்வெட்டகெய்யாவ, மோகன்வத்த கடற்கரையில் ரி – 56 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வடக்குக்கான நிதி யாழ்ப்பாணத்தில் முடங்காமல் வன்னிக்கும் வர வேண்டும்

## நாடாளுமன்றில் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை

“வரவு - செலவுத் திட்டத்தில் வடக்குக்கு ஒதுக்கப்படும் நிதி, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் வன்னிக்கும் வர வேண்டும்.”

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பாதீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 02▶

# காலியில் மூவர் சுட்டுக்கொலை சம்பவம் தொடர்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட 3 பேர் கைது!



காலி மாவட்டம், மித்தெனிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அவர் இன்று நாடாளுமன்றத்தில் உரையாறும்போது இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

மித்தெனிய சந்தியில் தனது பிள்ளைகள் இருவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபர் ஒருவரை இலக்கு வைத்து இனந்தெரியாத குழுவினரால் கடந்த 18ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் தந்தை மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரின் மகள் மற்றும் மகன் 02▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# அக்கரைப்பற்று - அம்பாறை பிரதான வீதியில் விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழப்பு!






(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று – அம்பாறை பிரதான வீதி அரசடிபகுதியில் கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றவர் உட்பட இரு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலையடிவேம்பு சாயிராம் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய பவிகாஸ் மற்றும் அதே வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவராசா விதுஷன் ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

அம்பாறையல் இருந்து அக்கரைப்பற்று ஆலையடிவேம்பிலுள்ள வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் நேற்று மாலை 3.00 மணிக்கு பிரயாணித்தனர். அரசடி பகுதியிலுள்ள வளைவில் அக்கரைப்பற்றிலிருந்து அம்பாறை நோக்கிப் பிரயாணித்த கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கனரக வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# வவுனியா - மன்னார் வீதி விபத்தில் பெண் காயம்!





(கி.வசந்தன்)

வவுனியா – மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா – மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதயில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பிய டிப்பர் வாகனம் ஒன்று வீதியில் ஏற முற்பட்டபோது நகரில் இருந்து வேப்பங்குளம் 8 ஆம் ஒழுங்கையில் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிலில் பயணித்த பெண் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வடக்குக்கான நிதி...**

“வெளிநாட்டுத் தூதுவர்களாக இருக்கலாம், அமைச்சர்களாக இருக்கலாம், ஜனாதிபதியாக இருக்கலாம். வடக்குக்கென வரும்போது யாழ்ப்பாணத்தில்தான் முகாமிடுகின்றனர்.

வடக்கு என்பது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியது. எனினும், வன்னிக்குப் பெரிதாக எவரும் வருவதில்லை. தேர்தல் காலங்களில் வரும் சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே, வன்னி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாதீட்டில் வடக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாரிய அளவான நிதி வன்னிக்கு வருமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நிதி ஒதுக்க வேண்டாம் எனக் கூறவில்லை. ஒதுக்கப்படும் நிதி ஏனைய மாவட்டங்களுக்கும் வர வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி வன்னிக்கும் வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்.” – என்றார்.

**இளைஞர் ஒருவர்...**

ரக துப்பாக்கியால் இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

இனந்தெரியாத ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

கடவத்தை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

கொலைக்கான காரணம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**காலியில் மூவர்...**

உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட மூன்று பேர் இன்று காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



# தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் போல் செயற்படவே கூடாது!

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து









“தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் போன்று செயற்படக்கூடாது. தொழிற்சங்கங்களும் உரிய வகையில் சேவையாற்றிக்கொண்டே அதை மேம்படுத்தும் வகையில் தங்களுக்கான தேவைப்பாடுகளை கோரவேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம், வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் என்பனவற்றின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் தனித்தனியே சந்தித்து இன்று வெள்ளிக்கிழமை காலை கலந்துரையாடினர்.

கொடுப்பனவுகளை அதிகரித்தல், இடமாற்றங்கள் தொடர்பில் அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளாலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன்போது கொடுப்பனவு அதிகரிப்பு மீளாய்வுக்கு இணக்கமும் தெரிவிக்கப்பட்டது. இடமாற்றங்களும் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் ஆராய்ந்து முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயற்பாடுகளை ஆளுநர் பாராட்டினார். அத்துடன் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக சிறப்பாகச் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கான மெச்சுரை சான்றிதழ் வழங்கவும் ஆளுநர் இணக்கம் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தமது திருத்தப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பு தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தனர். மேலும் மூன்றிலொரு பகுதி ஆளணி வெற்றிடமாகவுள்ள நிலையிலும், தம்மிடமிருந்து நூறு சதவீத சேவை எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர். இது சாத்தியமில்லாத விடயம் எனவும் தெரிவித்தனர்.

வதிவிடப் பயிற்சிநெறி நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். ஆளணி வெற்றிடத்துக்கு சில மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதுடன் வதிவிடப் பயிற்சிநெறியை தற்போதைய காலத்துக்கு ஏற்ப மாற்றியமைக்கவும் இணக்கம் காணப்பட்டது.

கூட்டுறவில் ஒரு காலத்தில் வடக்கு மாகாணம் கொடிகட்டிப் பறந்ததாகக் குறிப்பிட்ட ஆளுநர், தற்போது அது பின்னடைவான நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

அதை உயர்த்தும் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் உண்டு. சமூகப்பொறுப்புடன் செயலாற்றவேண்டும். அதேபோல இன்னும் வினைத்திறனாகச் செயற்பட எவ்வாறான சட்டத்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதையும் பரிந்துரைக்குமாறு ஆளுநர் இதன்போது கோரினார்.

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தால் கோரப்பட்ட தளபாடவசதிகள், காகிதாதிகள் என்பனவற்றை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

மேலும் களத்தரிசிப்பு கொடுப்பனவு தொடர்பில் நிலவும் முரண்பாடுகளை சீர்செய்யவும் உறுதியளிக்கப்பட்டது.

தேசியமட்ட நிலைப்பாட்டுக்கு அமைவாக ஆசிரிய வளவாளர்கள் என நியமிப்பதை விடுத்து பதில் ஆசிரிய ஆலோசகர்கள் என்ற பதவி நிலைக்கு நியமிக்க வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இணக்கம் வெளியிட்டார்.

இந்தச் சந்திப்புக்களில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் செ.பிரணவநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருமதி ப.ஜெயராணி, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி, வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலர் பொ.வாகீசன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலர் – நிர்வாகம் திருமதி எ.அன்ரன் யோகநாயகம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலர் – பொறியியல் சேவை எந்திரி ந.சுதாகரன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் சந்திப்புக்களில் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தென்னிலங்கையின் நெருக்கடி

நாட்டைப் பல வழிகளிலும் ஆட்டிப் படைத்து வரும் பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதை வஸ்து வர்த்தக சாம்ராஜ்யம் குறித்து பலரும் கவலைப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

பொது மக்களின் பாதுகாப்புக்காக உள்ள கட்டமைப்புகளுக்குள்ளும் உத்தியோகபூர்வ நிறுவனங்களுக்குள்ளும் சில நபர்கள் வரையில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் ஊடுருவி விரிவடைந்து இருக்கின்றன. இது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எதிர்காலத்தில் நிச்சயமாக பாதாள உலகக் குழுக்களை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வர சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதற்கு சிறிது காலம் எடுக்கும். - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருக்கிறார் எனச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

பாதுகாப்பு கட்டமைப்புக்குள் ஊடுருவும் அளவுக்கு பாதாள உலக சாம்ராஜ்யம் கனகச்சிதமாகச் செயல்படுகின்றது என்பதை நாட்டின் தலைவரே ஒப்புக்கொள்ளக்கூடிய சூழல் வந்திருப்பது நல்லதுதான்.

ஆனால் பாதாள உலகக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் அதன் ஸ்திரமான செயற்பாடுகள் தொடர்பில் அடிப்படையான புரிந்துணர்வு வராமல் அவற்றை ஒழிப்பது என்பது வெறும் காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கையாக மாத்திரமே நீளக்கூடியது என்று நினைக்கிறோம்.

இந்த விடயத்தில் சில யதார்த்தப் புற உண்மைகளை ஆட்சித்தலைமை ஏற்றுக் கொள்ளாத வரை பாதாள உலகக் குழுக்களை வெற்றிகரமாக தோற்கடிப்பது என்பது சாத்தியமாகக் கூடியதல்ல.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்ட இந்தச் சூழலில் பாதாள உலகக் குழுக்கள் உருவாகக்கூடிய கனகச்சிதமான களச் சூழல் வடக்குக் கிழக்கில்தான் நிலவியது, நிலவுகிறது என்பதை முதலில் ஆட்சித் தலைமை புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மாத்திரம் அல்லாமல், அது போன்ற பல்வேறு இயக்கங்களில் ஆயுதப் போராளிகளாக செயல்பட்ட 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இன்று பெரும்பாலும் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருக்கிறார்கள். ஒருபுறம் விடுதலைப் புலிகளும் மற்ற ஆயுத குழுக்களும் பயன்படுத்திய ஆயுதங்கள் அவை மறைக்கப்பட்ட களஞ்சியங்களில் இருந்து இன்னும் கண்டு பிடிக்கப்பட்டு முழுமையாக அப்புறப்படுத்தப் படவில்லை. மறுபுறம், வாழ்வாதாரங்களுக்குக் கூட வசதியற்ற நிலையில் சமூகத்தில் கவனிப்பாரின்றி விடப்பட்ட பல்லாயிரம் முன்னாள் போராளிகள் அன்றாடம்காய்ச்சி நிலையில் தினசரி அல்லற்படுகிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் கனரக ஆயுதங்களை இயக்குவதிலும், துணிகரமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதிலும் இன்னமும் கூட வலிமை மிகுந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

அவர்களது கஷ்டங்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் உண்மையில் வடக்கு கிழக்கில்தான் பாதாள உலகம் குழுக்கள் உருவாகி இருக்க வேண்டும். ஆனால் இந்த யுத்தம் முடிந்த 16 ஆண்டு காலத்தில் எந்த முன்னாள் போராளியும் ஆயுதப்பக்கம் தலைவைத்துப் படுக்க வேயில்லை என்பதுதான் உண்மை.

புதைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிப் பொருள்களை எடுத்து, அவற்றைச் செயலிழக்க வைத்து, அந்த வெடி மருந்துகளை கடலில் டைனமைற் வைத்து மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு விற்று வயிற்றுப் பிழைப்பை நாடும் சில நடவடிக்கைகளில் சில முன்னாள் போராளிகள் ஈடுபட்டிருந்தாலும் கூட, அவர்கள் அந்த ஆயுதங்களைப் பயன்படுத்தி வன்முறையில் ஈடுபடும் எண்ணத்தில் கிஞ்சித்தும் செயற்படவில்லை என்பது கடந்த காலச் சரித்திரம்.

ஆனால் தென்னிலங்கையில் விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக அரைகுறைப் பயிற்சி கொடுத்து கற்றுக் குட்டிகளாகப் படைத் தரப்பினரைக் களத்தில் இறக்கிய கொழும்பு, இப்போது அந்தக் கற்றுக் குட்டிகள் மத்தியில் இருந்து முளைத்த களைகளினால் பாதாள உலகக் குழு என்ற பெரும் பிரச்சினையை எதிர்கொண்டு நிற்கின்றது.

இந்த யதார்த்தப் புற உண்மையை உணர்ந்து கொண்டு, அதன் அடிப்படையில் தன்னுடைய பாதுகாப்பு வியூகங்களை கொழும்பு வகுக்காத வரை, இந்தப் பாதாள உலகப் பிரச்சினைகளில் இருந்து இலங்கை அரசினால் மீள முடியாது என்பதுதான் உண்மை நிலைவரம்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கு - கிழக்கில் தமிழர்களை அடக்கி ஒடுக்கி, அவர்கள் தாயகத்தை ஆக்கிரமித்து வைப்பதற்காக, வன்முறையே வெடிக்க வாய்ப்பு இல்லாத அந்தத் தேசத்தில் தன்னுடைய முழுப்படையையும் குவித்து வைத்திருக்கும் கொழும்பு, உண்மையில் அந்தப் படைபல வலிமையை இப்போதும் தன் மடியில் புற்றுநோய் போல வளர்ந்து வரும் பாதாள உலகக் குழுக்களின் பக்கம் திருப்ப வேண்டும். அதுவே பாதாள உலகக் குழுக்களை அடியோடு அழிப்பதற்கான மார்க்கமாக இருக்க முடியும்.

ஆனால் அதற்கு இடமளிக்காமல், வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்துவதற்காக தனது முழுப் படைப்பல வளத்தையும் கொழும்பு தமிழர் தேசம் மீது ஏவிவிட்டிருக்கின்றது.

இத்தகைய பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க அடக்குமுறைப் போக்கு தொடரும் வரை தன் மடியில் வளர்ந்து வரும் பாதாள உலகக் குழுவை தென்னிலங்கையால் கட்டுப்படுத்த முடியாது என்பதுதான் உண்மை.

# சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தின் பவள விழாவை முன்னிட்டுப் பல நிகழ்வுகள்!

## வடமாகாண ரீதியில் நடத்த ஏற்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு பவள விழா எதிர்வரும் மார்ச் 07 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டுப் பல்வேறு நிகழ்வுகளை வடமாகாண ரீதியில் நடத்தவுள்ளனர் என்று நிகழ்வுகளின் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நிகழ்வுகளின் ஏற்பட்டுக்குழு இன்று (21) யாழ். ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை நடத்தியிருந்தது.

இதன்போது ஏற்பாட்டுக்குழு மேலும் கூறுகையில்,

சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையமானது கடந்த 1950 ஆம் ஆண்டு மக்களை ஒன்றிணைத்து தனது முதல் சமூக சேவையை ஆரம்பித்தது.

இதன் பின்னர் படிப்படியாக தனது கட்டமைப்புக்களை வளர்த்துக் கொண்ட இந்தச் சனசமூக நிலையமானது விளையட்டுக்கழகம், முன்பள்ளி மற்றும் பொது மக்களின் கட்டமைப்பு உள்ளிட்ட பல கட்டமைப்புக்களை உருவாக்கி பல நூறு மக்களின் ஒத்துழைப்புடன் பெரும் பரிணாமம் பெற்று மக்களுக்காகப் பெரும் பங்காற்றியுள்ளது.

இவ்வாறான சமூக செயற்பாகளுடன் தற்போது 75 ஆவது ஆண்டை எதிர்வரும் மார்ச் 07 ஆம் திகதி எட்டவுள்ளது.

இந்த நிலையில் பவள விழாவை பிரமண்டமான முறையில் நடத்த ஏற்பாடு செய்யுள்ள நிலையில் தேசிய ரீதியில் பல விளையாட்டு நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நாளை (22) மாலை 6 மணிக்கு கரப்பந்தாட்ட போட்டியும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 7 மணிக்கு நீச்சல் போட்டியும் பிற்பகல் 3 மணிக்குக் கயிறு இழுத்தல் நிகழும் இடம்பெறவுள்ளன.




எதிர்வரும் முதலாம் திகதி காலை 6 மரதன் ஓட்ட நிகழ்வும், காலை 7.30 மணிக்குச் சைக்கிள் ஓட்ட நிகழ்வும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வலிகாமம் பிரதேச ரீதியில் உதைபந்தாட்ட நிகழ்வும், சிறுவர்களுக்கான பல்வேறு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இறுதி நிகழ்வு மார்ச் மாதம் 7 ஆம் திகதி பல்வேறு உயரதிகாரிகள் கல்விப் புலம் சார்ந்தோர் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.

இதேவேளை நிகழ்வுகளில் பங்கேற்க விரும்புவோர் தமது பதிவுகளை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்ன ராக த.ராஜ்குமார் - 0773933179, செ.டுபின்சன் - 0779509975, சி.செந்தூரன் - 0779459078 ஆகியோருடன் தொடர்புகொண்டு மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

அத்துடன் வெற்றியாளர்களுக்கு வெகுமதியான பணப் பரிசில்களும், கேடயங்களும் வழங்கப்படவுள்ளன என்று குறித்த ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.





# மன்னார் மாவட்ட செயலகத்தில் ‘ஊராட்சி முற்றம்’ எனும் நிகழ்வு

(த.சுபேசன்)

கிறிசலிஸ் நிறுவனத்தால் அறி முகம் செய்யப்பட்ட, சமுகத்தில் தீர்க்கப்படப்படாத நிலையில் காணப் படுகின்ற பிரச்சினைகளை துறை சார் அதிகாரிகளுடன் நேரடியாகக் கலந்துரையாடி தீர்த்து வைக்கும் “ஊராட்சி முற்றம்” எனும் நிகழ்வு அண்மையில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தின் நெய்தல் மாநாட்டு மண்டப கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறு கைத்தொழில் செய்பவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைப் பாடுடைய வீதிகள் புனரமைப்பு, பொது மலசலகூடப் பராமரிப்பு, குடி தண்ணீர் பிரச்சினை, பொதுப் போக் குவரத்தின் போதான பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், அடிப்படை மனித உரிமை மீறல் செயற்பாடுகள் உள்ளிட்ட பத்து விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு பெருமளவான பிரச்சினைகளுக்குத் தீர்வும் காணப்பட்டது.

இந்த ஊராட்சி முற்றக் கலந்துரை யாடலில் வடக்கு மாகாண மகளிர் விவ கார அமைச்சின் செயலாளர் வாகீசன், கிறிசலிஸ் நிறுவன சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் பிரகாஷ், கிறிசலிஸ் நிறுவனத்தின் கண்காணிப்புக்கும் மதிப்பீட்டுக்குமான அலுவலர் நவப் பிரசாத், மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தி யோகத்தர்கள் மற்றும் குடிசார் அமைப் புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் ஊராட்சி முற்ற நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு தீர்க்கப்படாத நிலையில் காணப்படுகின்ற மக் கள் நலன் சார்ந்த அடிப்படைப் பிரச்சி னைகள் தீர்க்கப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.





# நில அபகரிப்பு தொடர்பாக தெளிவூட்டும் செயலமர்வு!

(கல்லடி செய்தியாளர்)

அகம் மனிதாபிமான வள நிலையத்தால் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச சிவில் அமைப்புகள், இளைஞர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து நில அபகரிப்புத் தொடர்பாகத் தெளிவூட்டும் செயலமர்வு செவ்வாய்க்கிழமை (18) மட்டக்களப்பிலுள்ள தனியார் நிறுவனத்தில் இடம்பெற்றது.

இதன்போது சட்ட ஆலோசகர்கள் பிரதேச அமைப்பாளர்களுடன் கலந்துரையாடல்களை ஏற்படுத்தி அவர்களின் ஊடாக மக்களுக்கு முறையான தெளிவூட்டல் சென்றடைவதற்கான வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு அகம் மனிதாபிமான வளநிலைய பிரதி இணைப்பாளர் ஏ.மதன் தலைமையில் இடம்பெற்றது.

கள இணைப்பாளர் ப. சிரோஜன், நிறுவனத்தின் உதவிக் கணக்காளர் செல்வி கு. சஞ்சலிதா, ஊடகவியலாளர்கள், சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவன இணைப்பாளர் தி.கிருசாத், மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் சிவில் அமைப்புகள், மற்றும்சட்ட ஆலோசகர் சந்திரகுமார், முன்னாள் காணி உதவி ஆணையாளர் ரவிராஜ் ஆகியோர் இந்தச் செயலமர் வின் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

# நிலவும் வறட்சியான காலநிலையால் நீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும்!

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவிப்பு

(க.மகாதேவன்,உடப்பு)

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இந்த நாள்களில் நாட்டில் நிலவி வரும் மிகவும் வறட்சியான காலநிலை காரணமாக, நீர் நிலைகளின் நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது என்றும் வெப்பம் காரணமாக மக்களின் நீர் நுகர்வு மிக அதிகமாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



குடி தண்ணீர் விநியோகம் குறைவாக இருப்பதால், அனைவரின் அத்தியாவசிய குடி தண்ணீர் மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கு சம அளவில் நீர் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

எனவே, வாகனங்களைக் கழுவுதல், தோட்ட நடவடிக்கைகள் போன்றவற்றுக்காகநீரைப்பயன்படுத்துவதைக் குறைத்து, தேவையான அன்றாட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பொது மக்களை கேட்டுள்ளது.

இதுபோன்ற சூழ்நிலைகளில், நுகர்வோரின் குடி தண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உயர் நிலப் பகுதிகளில் உள்ள நீநுகர்வோருக்கு தண்ணீரை விநியோகிக்கும்போது குறைந்த அழுத்தம் ஏற்படக்கூடும் என்று தொடர்புடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், நிலவும் வறட்சியான காலநிலை காரணமாகப் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது என்றும் இந்த நேரத்தில் பாதுகாப்பான குடி தண்ணீரை முடிந்தவரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் சபை பொது மக்களைக் கேட்டுள்ளது.





# சிவனொளிபாத மலைக்கு 2 லட்சம் யாத்திரிகர் வருகை!

(மஸ்கெலியா)

கடந்த வார இறுதியில் சிவனொளிபாத மலைக்கு இரண்டு லட்சம் யாத்திரிகர்கள் வருகை தந்துள்ளனர் என்று நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.ஏ.எச்.வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

யாத்திரிகர்கள் அதிக அளவில் வருகையால் வாகன தரிப்பிடங்கள் நிரம்பிய நிலையில் மேலதிக வாகனங்கள் நல்லதண்ணி மறே நெடுஞ்சாலையிலும் நல்லதண்ணி மஸ்கெலியா பிரதான வீதியில் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம் வரையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் இரத்தினபுரி வழியாக அதிக அளவில் யாத்திரிகர்கள் வருகை தந்த தால் மலை உச்சியில் பாரிய இட நெருக்கடி ஏற்பட்டது.

இதன் காரணமாக நல்லதண்ணி வழியில் சென்று கொண்டிருந்த யாத்திரிகர்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு வருகை தந்த அனைத்து யாத்திரிகர்களுக்கும் முழுமையாக பாதுகாப்பு வழங்கப்பட்டது என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.ஏ.எச.வீரசேகர தெரிவித்தார்.










# மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் வெற்றி கிண்ணம் கல்பனா அணியிடம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை கிரிக்கெட் சங்கம் நடத்திய மருதமுனை வெற்றிக் கிண்ணம் – 2025, 10 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஏ. மனாஸ் தலைமையில் (15) நடைபெற்றன.

இந்தச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு மருதமுனை யுனிவர்ஸ் அணியும் கல்பனா அணியும் தெரிவாகின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கல்பனா அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 68 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யுனிவர்ஸ் அணியினர் 10 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர். சாம்பியன் அணியாக கல்பனா அணி தெரிவானது.

இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட பொருளாளரும் உயர்பீட உறுப்பினருமான அல்ஹாஜ் கலீல் முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக ஆபிதா ஹென்லூம் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.என்.இஸட். றூமி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.சமட் ஹமீத் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கு விசேட அதிதியாக எம்.ரி.வாக்கிர் அஜ்மல் கலந்து கொண்டார்.

இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகனாக கல்பனா அணி வீரர் அன்பஸ் அமானுல்லா தெரிவானார். தொடரின் சிறப்பு ஆட்டக்காரருக்கான விருது இருவருக்கு வழங்கப்பட்டது. தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கல்பனா அணியின் வீரர் எம்.ஜெ. எம்.பயாஸ் தெரிவானதுடன் சிறந்த பந்துவீச்சாளராக யுனிவர்ஸ் அணி வீரர் சர்ஜுன் தெரிவானார்.

சாம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்ட மருதமுனை கல்பனா அணியினருக்கு சம்பியன் வெற்றி கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் அதிதிகளால் வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட யுனிவர்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின்போது, பிரதம அதிதிக்கு மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஏ.மனாஸ், செயலாளர் எம்.ஐ. நஜிமுல் றியாஸ் ஆகியோர் ஒன்றிணைந்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

இந்த நிகழ்வில் மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் சிரேஷ்ட உதவித் தலைவரும் சுற்றுப்போட்டி குழு தவிசாளருமான ஏ.எம்.றியாஜத், மேன்முறையீட்டு குழு தவிசாளர் எம். ஆர்.மபாஸ், ஒழுங்காற்று குழு தவிசாளர் ஏ.ஆர்.எம். உவைஸ், மத்தியஸ்தர் குழு தவிசாளர் எம். என். எம்.நாஜித், தொழில்நுட்ப குழு தவிசாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ், சங்கத்தின் பொருளாளர் எம்.எம். சறூக், உப செயலாளர் எம்.பி.எம். றாஜித், புள்ளிக் கணிப்பாளராக கடமையாற்றிய தொழில்நுட்ப குழு உறுப்பினர் ஏ.கே. ஸானிஜ் கலீஸ், வர்ணனையாளர்களாக கடமையாற்றிய சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் சி.எம்.அஸ்கர், நுபைஸ் உட்பட சங்கத்தின் உயர்பீட உறுப்பினர்கள், கிரிக்கெட் ரசிகர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.









# ரணவீரு சேவா அதிகார சபையின் நடமாடும் சேவை மட்டக்களப்பில்!

(கல்லடி செய்தியாளர்)

ரணவீரு சேவா அதிகார சபையால் நடமாடும் சேவை ரணவீரு சேவா அதிகார சபையின் பணிப்பாளர் பிரிகேடியர் கே.பி.பி. கருணாநாயக்க தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் பங்குபற்றுதலுடன் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (20) இடம்பெற்றது.

நாட்டில் உயிர் நீத்த முப்படை வீரர்கள், காணாமல் போன, அங்கவீனமுற்ற படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் நிர்வாக தேவையை இலகுபடுத்தும் முகமாக ரணவீரு சேவா அதிகார சபையால் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் முப்படை வீரர்கள், அங்கவீனமுற்ற வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நிர்வாக சேவைகள் அவர்களின் இடத்துக்கே சென்று நிறைவேற்றப்பட்டன.

இதன்போது இராணுவ வீரர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு பிரச்சினைகள் மற்றும் அங்க வீனமுற்றவர்களுக்கான உபகரணங்கள், வாழ்வாதாரத்தை



மேம்படுத்துவதற்காகத் தனி நபர் கடன் வசதி, வியாபார கடன், தொழில் முயற்சி கடன், பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்கள், வீடமைப்பு திட்டங்கள் தொடர்பான சேவைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் ரணவீரு சேவா அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர்களான துசாரஜயசிங்க, பார்க்கயகமகே, இராணுவ இணைப்பாளர் மொகமட் ருஸ்தீன், உதவி மாவட்ட செயலாளர் ஜீ. பிரணவன், உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கல்!

(சர்ஜூன் லாபீர்)

பாடசாலை மாணவர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் ஓ.என்.யூ.ஆர். நிறுவனத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி பங்களிப்பில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 07 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 110 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் இரண்டாம் கட்ட நிகழ்வு மல்வத்தை-03 மஜீட்புர வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ வாஜீத் அலியின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். முஹம்மது ஹனீபா கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே. குறைசா, பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# அமெரிக்க உறவின் முரண்பாடே ஐரோப்பிய இராணுவ தோற்றம் !

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா.

***(ஐரோப்பாவுக்கான இராணுவம் அவசியம் என்று உக்ரைன் கோருவது, ஐரோப்பாவில் நீண்ட கால போர்க் பகைமை சூழலையே ஏற்படுத்தும். இதனை உடனடியாக சில ஐரோப்பிய நாடுகள் ஆதரிக்க முற்பட்டாலும் நீண்ட காலத்தில் சாத்தியங்கள் குறைவே.***

***அதேவேளை, டிரம்பின் பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத், உக்ரைன் நேட்டோவில் இணையும் யோசனையை நிராகரித்துள்ளார். உக்ரைனின் நேட்டோ நம்பிக்கைகள் மற்றும் 2014 இற்கு முந்தைய எல்லைகள் யதார்த்தமானவை அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.)***

ஐரோப்பாவுக்கான இராணுவம் அவசியம் என்று உக்ரைன் ஜனாதிபதி விலொடிமிர் ஜெலென்ஸ்கி ஜேர்மனியில் அவசர அவசரமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**ஐரோப்பிய இராணுவம்**

கடந்த வாரம் ஜேர்மனியின் மியுனிச்சில் இடம்பெற்ற பாதுகாப்பு உச்சிமாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நீண்டகால பழமை வாய்ந்த உறவு முடிவுக்கு வருகின்றது என்று அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜேடிவன்ஸ் தெரிவித்துள்ளார் என உக்ரைன் ஜனாதிபதி ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். ஆயினும் இதனை அமெரிக்க–ஐரோப்பிய இராஜதந்திரிகள் இதுவரை மறுக்கவில்லை.

விரைவில் அமெரிக்க – ரஷ்ய சமாதான பேச்சு வார்த்தைகள் சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை எதிர்க்கும் வண்ணம், எங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடு படாமல் எங்களின் முதுகின் பின்னால் செய்து கொள்ளப்படும் எந்த உடன்படிக்கையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஐரோப்பாவுக்கு உதவி செய்வதற்கு அமெரிக்கா முன்வராது எனும் தோற்றப்பாட்டில் உக்ரைன் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்குப் போதிய பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்காததால், எங்களை பாதுகாக்காததால் அமெரிக்காவுக்கு உக்ரைனின் கனிய வளங்களை வழங்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவுக்கு அச்சுறுத்தல் என்று வரும்போது அமெரிக்கா உதவிக்கு வராது என்பதற்கான சாத்தியக் கூறுகளை நாங்கள் நிராகரிக்க முடியாது என்று உக்ரைன் ஜனாதிபதி மிகக் காட்டமாக தெரிவித்துள்ளார்.

தனது சொந்த இராணுவத்தை கொண்ட ஐரோப்பா குறித்து பல தலைவர்கள் விருப்பம் வெளியிட்டுள்ளனர். ஐரோப்பிய இராணுவம் உருவாக்குவது குறித்து அவர்கள் சாதகமான பதில்களை தெரிவித்துள்ளனர் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**அமெரிக்கா - ரஷ்ய பேச்சு!**

விரைவில் நிகழவுள்ள இருதரப்பு அமெரிக்கா – ரஷ்ய அமைதிப் பேச்சுகளை, ஜெலென்ஸ்கி தனக்குப் பிடித்தபடி– தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நிராகரிக்க முடியும்.

ஆயினும் டிரம்ப் எந்தவொரு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலையீடும் இல்லாமல் புட்டினுடன் ஒரு அமைதி ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இங்கிலாந்து பிரதமர் கெயார் ஸ்டார்மர் உக்ரைனுக்கு பிரித்தானிய துருப்புக்களை அனுப்பத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

உக்ரைனின் நேட்டோவில் இணையும் முயற்சியை எப்போதும் இங்கிலாந்து ஆதரிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோவின் எதிர்காலத்தில் உக்ரைன் இணைவதற்கு அவசியமானதாக பார்க்கவில்லை என்று டிரம்ப் நிர்வாகம் மிகத் தெளிவாகக் கூறிய போதிலும், இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மர் தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கவில்லை.

இருப்பினும் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டுக்கு முன்னதாக ஜெலென்ஸ்கியுடன் பேசிய ஸ்டார்மர், நேட்டோ கூட்டணிக்கு உக்ரைனின் மாற்ற முடியாத இலக்கை அடையும் பாதைக்கு இங்கிலாந்தின் முழு ஆதரவையும் உறுதியளித்தார்.

**நேட்டோவில் உக்ரைனுக்கு இடமில்லை**

இதற்கிடையில், டிரம்பின் பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத், உக்ரைன் நேட்டோவில் இணையும் யோசனையை நிராகரித்துள்ளார். உக்ரைனின் நேட்டோ நம்பிக்கைகள் மற்றும் 2014 க்கு முந்தைய எல்லைகள் யதார்த்தமானவை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் டிரம்ப் உண்மையில் ரஷ்யாவுடன் எங்கு நிற்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க ஐரோப்பா போராடி வருகிறது. ரஷ்யாவுடன் எப்போதும் நட்புச் சூழ்நிலையை உருவாக்க டிரம்ப் முயன்று வருகிறார். ஆயினும் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் ரஷ்யாவை

தொடர்ச்சி▼



# அமெரிக்க உறவின் முரண்பாடே ஐரோப்பிய இராணுவ தோற்றம் !

தொடர்ச்சி

பகைப்பது என்பது பலருக்கும் தெரிந்த விடயம் தான். ஆயுத விற்பனைக்கும் போர்ப்பகைமை சூழலை தங்கள் அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

**உக்ரைனில் பிரித்தானிய துருப்புக்கள்**

அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றுவதால், இங்கிலாந்து தனது துருப்புக்களை உக்ரைனுக்கு அனுப்ப வாய்ப்புள்ளது என்று பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை விரைவுபடுத்துவதில் இங்கிலாந்து முன்னணிப் பங்காற்றத் தயாராக உள்ளது.

தேவைப்பட்டால், நமது சொந்தப் படைகளை தரையில் நிறுத்துவதன் மூலம் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களுக்கு பங்களிக்கத் தயாராகவும் விருப்பமாகவும் இருப்பதும் இதன் பொருள் என்றும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் நாட்டுக்கு பிரிட்டிஷ் படைகள் அனுப்புவதை நான் எளிதாகச் சொல்லவில்லை. பிரிட்டிஷ் படைவீரர்களையும் பெண்களையும் ஆபத்தில் ஆழ்த்துவதில் வரும் பொறுப்பை நான் மிகவும் ஆழமாக உணர்கிறேன்.

உக்ரைன் நாட்டுக்கு குறைந்தளவு 100,000 பிரித்தானிய துருப்புக்கள் தேவைப்படலாம் என்று மதிப்பிடுகின்றனர். ஆனால் உண்மையில் யார் தான் ரஷ்யாவை எதிர்த்து போரிட போகின்றார்கள் என பிரித்தானிய அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பிரிட்டனின் இராணுவம் வளங்களால் நிரம்பி வழிவதில்லை என்பதும் மற்றொரு முக்கிய விடயமாகும். மேலும் இங்கிலாந்து ஜெனரல்கள் அதிக பாதுகாப்பு செலவினங்களைத் தற்போது கோரி வருகின்றமை அரசுக்கு உள்ள பாரிய தலைவலியாகும்.

இவை எல்லாவற்றையும் விட பிரித்தானிய பொதுமக்கள் தங்கள் குழந்தைகளை இன்னோர் நாட்டில் பலிக்கடாவாக்க சம்மதிக்க மாட்டார்கள். இரண்டாம் உலகப் போரின் பின்னர் பிரித்தானிய படைகள் எந்தவொரு பாரிய படை நகர்த்தல்களையும் நடாத்தவில்லை.

அமெரிக்காவை மீறி பிரித்தானியத் துருப்புக்கள் உக்ரைன் போரில் கலந்து கொள்வது சாத்தியமற்ற ஒரு செயலாகவே கருதப்படுகிறது. பிரித்தானிய துருப்புக்கள் உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் தேர்தல் அரசியல் ரீதியான இலாபங்களுக்கான வாய்ச் சவாடல்களாகவே கருதப்படுகின்றன.



# கட்டாக்காலி நாய்களது தொல்லை மஸ்கெலியா நகரில் அதிகரிப்பு!

(மஸ்கெலியா)

கட்டாக்காலி நாய்களின் தொல்லை மஸ்கெலியா நகரில் அதிகரித்துள்ளது. இதனால் பாதசாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சாமி மலை மஸ்கெலியா நல்லதண்ணி ஆகிய நகரங்களில் கட்டாக்காலி நாய் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் நகருக்கு வரும் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபை உடன் கவனம் செலுத்திக் கட்டாக்காலி நாய்களது தொல்லையில் இருந்து மக்களைக் காக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.



# காரைதீவு, நிந்தவூர், ஒலுவில் பிரதேச உணவகங்களில் திடீர் சோதனை!

## நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு

(நூருல் ஹுதா உமர்)

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புமிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுனங்களை சோதனைக்கு உட்படுத்தும் விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் காரைதீவு, நிந்தவூர் மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பிராந்திய சுற்றுச் சூழல், தொழில் சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் தலைமையிலான, அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.முனவ்வர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.இஸ்ஸதீன், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருள்களும் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தயாரிக்கும் பாத்திரங்களும் மீடகபப்பட்டன.

பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டம் பிராந்திய பணிப்பாளர் உத்தரவுக்கு அமைவாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நிந்தவூர் பிரதேச முக்கியஸ்த்தர் கலந்துரையாடல்!

(எஸ்.எம்.முபீன், அபு அலா )

கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகள், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் செயற்பாடுகள் தொடர்பில் நிந்தவூர் பிரதேச முக்கியஸ்த்தர்களுடனான கலந்துரையாடல் நிந்தவூர் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கடந்த பொதுத் தேர்தலின் பின்னரான கட்சியின் அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் நலன்சார் செயற்பாடுகள் மற்றும் நாடாளுமன்ற உரைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கட்சியின் நிந்நதவூர் பிரதேச முக்கியஸ்த்தர்கள், ஆதரவாளர்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சம்மாந்துறைப் பகுதியில் காட்டு யானைகள் சஞ்சாரம்

(பாறுக் ஷிஹான்)

வேளாண்மை அறுவடையின் பின்னர் யானை கூட்டம் புதிதாக முளைக்கும் புல்லை உண்பதற்காக வயல் பகுதிகளை நாடி வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் திடிரென சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி வில்லுக்குளப் பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு காலை முதல் மாலை வருகை தருகின்றன.

இதன்போது குறித்த யானைகள் அங்குள்ள புதிய புல் இனங்களை உண்ணுவதுடன்கூட்டத்தில்உள்ள யானை குட்டிகளுடன் விளையாடுவதையும் காண முடிகிறது.

பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என சுமார் 100இற்கும் அதிகமான யானைகள் அந்தப் பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தருகின்றன.

தினமும் இந்தப் பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். இவ்வாறு வயல் வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதனாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் யானைகள் உண்ணுவதற்கு வருகை தருகின்றன. அருகில் உள்ள பொது மக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மூன்றாண்டு நினைவுகளில் சுன்னாகம் டாக்டர் விக்கினேஸ்வரா!

மக்கள் மனங்கவர்ந்த மருத்துவர் ப.விக்கினேஸ்வரா மறைந்து மூன்றாண்டுகள் கடந்துவிட்டன. இருப்பினும் இறந்த பின்னும் பயன்கொண்டோர் நெஞ்சங்களில் வாழும் மாண்புறு வைத்தியராக ப.விக்கினேஸ்வரா திகழ்கிறார் என்றால் மிகைப்படாது.

மருத்துவர் ப.விக்கினேஸ்வரா கைராசியும், வாய்ராசியும் சிறந்து அமையப் பெற்ற மருத்துவர்.

நான் சிறுவனாக இருந்த காலம் தென்மராட்சி சரசாலையிலேயே எனது வாழ்வு அமைந்தது. ஆயினும் எங்கள் குடும்பத்தினருக்கு மருத்துவத் தேவை ஏற்படும் போதெல்லாம் எனது மாமனார் அமரர் நா.இராஜசிங்கத்தின் வழிகாட்டலில் சுன்னாகத்திலிருந்த டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் மருத்துவமனையிலேயே நீண்ட வரிசையில் காத்திருந்து மருந்தெடுக்கும் வழக்கம் இருந்தது.

அவரது புதல்வர் ஐங்கரன் விக்கினேஸ்வரா பரி. யோவான் கல்லூரியில் எனது வகுப்புத் தோழராக இருந்தமையால் என்மீதான கவனிப்பும் சற்று அதிகமாக இருந்தது. அன்று தொட்டு இறக்கும்வரை டாக்டர் ப.விக்கினேஸ்வராவைப் பொறுத்தவரையில் எனது பெயர் சரசாலைத் தம்பி.

மருத்துவராக என்னோடு பழகிய வைத்தியர் பின் எனது பேச்சின் இரசிகர்



ஆனார். அப்போதும் 'சரசாலைத் தம்பி பேசுது' என்று புளகாங்கிதம் அடைவார். மகன் ஐங்கரன் ஆஸ்ரேலியாவில் இருந்து தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்களில் சரசாலைத் தம்பி என்று அழைத்து தானும் ஓரிரு வார்த்தைகள் வாஞ்சையுடன் பேசுவார்.

அவரது நினைவுகளை அர்த்தப்படுத்தும் வகையில் அவர்தம் குடும்பத்தினர் ஈழத்து எழுத்தாளர் ஒருவரது நூல் ஒன்றை வருடந் தோறும் வெளியிட்டு வருகின்றனர்.

அந்தவகையில் இந்த ஆண்டு ஆசிரியரும் கவிஞருமாகிய இ.சு.முரளிதரன் எழுதிய 'கதைப்பந்தாட்டம்' என்னும் நூல் ஜீவநதி பதிப்பகத்தின் 436 ஆவது வெளியீடாக மலர்கிறது.

2022 இல் மறைந்த டாக்டர் ப.விக்னேஸ்வராவின் 31 ஆம் நாள் நினைவாக பேராசிரியர் சு.பாலசுகுமார் எழுதிய 'ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' என்னும் நூல் வெளியிடப்பட்டது.

2023 இல் முதலாம் ஆண்டு நினைவாக ஆசிரியர் தீபச்செல்வன் எழுதிய 'பள்ளிக்கூடங்கள் கட்டடக்கூடுகள் அல்ல' என்னும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

2024 இல் ஈராண்டு நினைவாக (அமரர்) கலாநிதி த.கலாமணி எழுதிய 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' (முப்பத்தைந்து படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு) வெளியிடப்பட்டது.

மண் பயனுற வாழ்ந்த மக்கள் மருத்துவர்காலத்தால்இன்றும்எங் களோடு வாழ்கிறார். இதற்கு அவ ரது நினைவாக அமையும் நூல் வெளியீடுகளும் உரமாக அமைகின்றன.

தந்தையை நீள நினைந்து போற்றும் குடும்பத்தினரையும் அவர்தம் இலக்கிய முயற்சிகளையும் போற்றுகிறேன்.

**- செந்தமிழ்ச் சொல்லருவி**
**சந்திரமௌலீசன் லலீசன்**







# மத்திய அரசின் வைத்தியசாலை வளங்களை மாகாண வைத்தியசாலைகளுக்கு பகிர்தல்!

## இது தொடர்பில் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்தியத்தில் உள்ள மத்திய அரசின் ஆதார வைத்திய சாலைகளின் வளங்களை மாகாண ஆதார வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்து பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குவதற்கு உரிய விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த வைத்திய சாலைகளின் பணிப்பாளர்கள், அத்தியட்சகர்களுடன் கலந்துரையாடல் ஒன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம்.ஜவாஹிர், அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எம்.ரகுமான் உட்பட சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோயில், பொத்துவில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது பொது மக்களுக்கு சுகாதார சேவையை வழங்கும் போது சுகாதார நிறுவனங்கள் சுகாதார வசதிகளை பகிர்ந்து கொள்வதில் எதிர்நோக்குகின்ற சவால்கள், சுகாதார சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கல்முனை பிராந்தியத்தில் மத்திய அரசின்கீழுள்ள 4 ஆதார வைத்தியசாலைகளும்,மாகாண அமைச்சின் 3 ஆதார வைத்தியசாலை களும், 14 பிரதேச வைத்தியசாலைகள், 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் 8 ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகள் ஊடாகவும் பொது மக்களுக்குச் சேவை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 6 ஆயிரம் ரூபா கல்வி வவுச்சர் மோசடிகள்; மாணவர் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்!

## விழிப்புணர்வு அவசியம் என்கிறார் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எம்.பி.



கல்வி அமைச்சு ஏழை மாணவர்களுக்கு வழங்கிய 6 ஆயிரம் ரூபா பெறுமதியான கல்வி வவுச்சர் திட்டத்தை சில வர்த்தக நிறுவனங்கள் துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இது மாணவர்களின் கல்வி உரிமைக்கு எதிரான பெரிய குற்றமாகும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

மாணவர்களுக்குத் தேவையான பொருள்களுக்குப் பதிலாகத் தேவையற்ற பொருள்களை விற்பனை செய்ய முயற்சி செய்கின்றனர்.

வவுச்சர் மூலம் வாங்கும் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்து, கூடுதல் பணம் செலுத்துமாறு சிலர் வற்புறுத்தி வருகின்றனர் என்றும் சில பொருள்களுக்கு பணம் செலுத்தினால் மட்டுமே வழங்குவதாகத் தெரிவிப்பதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, விற்பனையாகாது தேங்கியுள்ள பழைய பொருள்களையும் விற்பனை செய்யச் சிலர் முயற்சி செய்கின்றனர் என்றும் பெற்றோரால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக மாணவர்களும் பெற்றோர்களும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

சரியான, நம்பகரமான வர்த்தக நிறுவனங்களில் மட்டுமே வவுச்சரை பயன்படுத்த வேண்டும். விலை அதிகமாக விற்பனை செய்யும் கடைகளை புறக்கணிக்க வேண்டும். மோசடிகள் தொடர்பில் உடனடியாக அதிகாரிகளிடம் புகார் அளிக்க வேண்டும்.

அனைவருக்கும் உதவி செய்யும் மனப்பான்மை வேண்டும். ஏழை மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை முழுமையாக பெறச்செய்யுங்கள். இல்லை என்றால் கடவுளும் மன்னிக்க மாட்டார். முறைகேடுகளை அனுமதிக்காமல், உண்மையான வர்த்தகர்களை நாடி, உங்கள் உரிமையை பாதுகாக்க வேண்டும்.- என்றார்.

# மாணவர்கள், ஆசிரியர்கள் நலன் கருதி 2,152 கோடி ரூபாவை வழங்க வேண்டும்

## பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

தமிழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி, 'சமக்ர சிக் ஷா' திட்டத்தின்கீழ் 2,152 கோடி ரூபா நிதியை உடனே விடுவிக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமருக்கு நேற்று அவர் எழுதிய கடிதத்தில்,

"தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக அமல்படுத்தி, மும்மொழிக் கொள்கையை ஏற்கும்வரை, தமிழகத்துக்கு 'சமக்ர சிக் ஷா' திட்டத்தின்கீழ் நிதி விடுவிக்கப்பட மாட்டாது' என்று மத்திய கல்வித் துறை அமைச்சர் சமீபத்தில் தெரிவித் திருப்பது ஆழ்ந்த கவலையளிப்பதாக உள்ளது. இது தமிழக மாணவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்கள் மத்தியில் பெருத்த கவலையையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அரசின் இரண்டு வெவ்வேறு திட்டங்களான 'சமக்ர சிக் ஷா' திட்டத்தையும், தேசிய கல்விக் கொள்கையைப் பிரதிபலிக்கும் பி.எம். ஸ்ரீ. திட்டத்தையும் ஒன்றாகப் பொருத்



திப் பார்ப்பது என்பது அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. தற்போது ஒரு மாநிலத்தில், அங்குள்ள காலச்சூழலுக்கேற்ப பின்பற்றப் பட்டு வரும் கொள்கைகளுக்கு எதி ராக, அந்த மாநிலத்தைக் கட்டாயப் படுத்துவதற்கு, நிதி வழங்கும் விவ காரங்களில் மத்திய அரசு அழுத்தம் தரும் இத்தகைய முயற்சி, கூட்டாட்சித் தத்துவத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

குறிப்பிட்ட தேவைகளின் அடிப்ப டையில் தங்களது கல்விக் கொள் கைகளை வடிவமைக்கும் மாநிலங்க ளின் உரிமைகளை பெருமளவில் பாதிக்கும்.

தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின்கீழ் நிதி விடுவிக்கப்படாததால், ஆசிரியர்கள் சம்பளம், மாணவர்களுக்கான நலத் திட்டங்களை உள்ளடக்கிய கல்வி முன்னெடுப்பு முயற்சிகள், கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் பயிலும் வறிய நிலையில் வாழும் மாணவர் களுக்கான கல்வித் தொகையை திருப்பிச் செலுத்துதல் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கான போக்குவரத்து போன்றவற்றுக்கான பல முக்கிய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில், லட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி, இந்த விஷயத்தில் தாங்கள் தலையிட வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்துக்கு நிதி விடுவிக்கப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள வருந்தத்தக்க சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, தேசிய கல்விக் கொள்கை-2020 ஐ செயல்படுத்துவதோடு 'சமக்ர சிக் ஷா' திட்டத்தைப் பொருத்திப் பார்க்காமல், 2024-25 ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு வரவேண்டிய 2,152 கோடி ரூபா நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# மகா கும்பமேளாவில் நீராடினர் 50 லட்சம் நேபாள பக்தர்கள்

நேபாளத்தைச் சேர்ந்த 50 லட்சத் துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மகா கும்பமேளாவில் புனித நீராடி உள்ள னர் என தகவல் வெளியாகி உள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக் ராஜ் நகரில் கடந்த ஜனவரி 13 ஆம் திகதி முதல் மகா கும்பமேளா நடை பெற்று வருகிறது. அங்குள்ள திரி வேணி சங்கமத்தில் இந்தியா மட்டு மல்லாது வெளி நாடுகளைச் சேர்ந் தவர்களும் புனித நீராடி வருகின்றனர். குறிப்பாக, பக்கத்து நாடான பங்களா தேஷை சேர்ந்த 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை மகா கும்ப மேளாவில் புனித நீராடி உள்ளனர்.

இதுகுறித்து அரசு வெளியிட்ட அறிக்கையில்,

பங்களாதேஷை சேர்ந்த ஏராள மானோர் மகா கும்பமேளாவில் பங் கேற்று புனித நீராடி வருகின்றனர். குறிப்பாக, பங்களாதேஷில் உள்ள ராமரின் மனைவி சீதா தேவி பிறந்த ஊரான ஜானக்பூரிலிருந்து அரிசி உள்ளிட்ட அட்சதை பொருள்களை கொண்டுவரும் பக்தர்கள், அவற்றை பிரயாக்ராஜ் நகரில் கங்கை நதிக் கரையில் உள்ள ஹனுமன் கோயி லில் காணிக்கையாக செலுத் துகின்றனர்.

மேலும் பங்களாதேஷ் பக்தர்கள் திரிவேணி சங்கமத்திலிருந்து கங்கை நீர் மற்றும் மண்ணை புனிதமாகக் கருதி எடுத்துச் செல்கின்றனர். மகா கும்பமேளாவில் பங்கேற்கும் பங்களா தேஷ் பக்தர்கள், வாராணசியில் உள்ள காசி விஸ்வநாதர் மற்றும் அயோத்தி ராமர் கோயில்களுக்கும் சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு சொந்த ஊர் திரும்புகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





# இஸ்ரேலில் பஸ்களில் வெடிப்பு சம்பவம்; பயங்கரவாதத் தாக்குதலென சந்தேகம்

இஸ்ரேலின் டெல் அவிவ் பகுதியில் மூன்று பஸ்கள் வெடித்தமை சந்தேகத்திற்குரிய பயங்கரவாத தாக்குதலாகும் என இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் நடத்தப்பட்ட சோதனைகளுக்கு அமைய வன்முறை தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஹமாஸின் வான்வழித் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக கூறப்படும் இஸ்ரேலிய பணயக் கைதிகள் நால்வரின் உடல்கள் நேற்று இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களில் இரண்டு சிறுவர்கள் அடங்குகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, கொல்லப்பட்ட இஸ்ரேலிய பணயக்கைதிகள் நால்வரின் உடல்கள் ஒப்படைக்கப்பட்டது, மிகுந்த வேதனை அளிப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.







# அமெரிக்கப் புலனாய்வு பிரிவில் இந்தியருக்கு அதியுயர் பதவி!

அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான FBI பணிப்பாளராக காஷ் படேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

உளவு அமைப்புகளில் மிகவும் வலிமையானதாக அமெரிக்கப் புலனாய்வு அமைப்பு திகழ்கிறது.

இந்த அமைப்பு பல நாடுகளை 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறது.

தற்போது இதன் பணிப்பாளராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த காஷ் படேலை உத்தியோகப்பூர்வமாக அமெரிக்க ஜனாதிபதி நியமித்துள்ளார்.







# இந்தோனேசிய ஜனாதிபதியின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் போராட்டம்

இந்தோனேசிய ஜனாதிபதியின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும், போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மாணவர்களால் இந்த போராட்டம் முன்னெடுக் கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தோனேசிய தலைநகரில் கருப்புக்கொடிகள் மற்றும் பதாதை களை ஏந்தியவாறு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், போராட்ட இடத்துக்கு பொலிஸார் வரவழைக்கப் பட்டதுடன், போராட்டம் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பக்கம் 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 21/02/2025

## பனிப்பாறை சரிவில் சிக்கில் ஒருவர் பலி

பிரிட்டிஷ் கொலம்பியா - அல்பெர்டா எல்லைக்கு அருகே உள்ள ராக்கி மலைப்பகுதியில் நடந்த பனிப்பாறைச் சரிவில் சிக்கி 42 வயது ஆண் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் 02▶



# மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு பேர் விஷவாயுத் தாக்கத்தால் மரணம்

**கனடாவின் அல்பர்ட்டா குரோ லேக் ப்ரொவின்ஷியல் பூங்காவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**

**கடந்த சனிக்கிழமை அவசர சேவை படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.**

பனியில் மீன்பிடிக்கும் கூடத்தில் இரண்டு ஆண்கள் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

கூடத்தில் கார்பன் மோனாக்ஸைடு விஷவாயு தாக்த்தனால் இந்த இருவரும் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவர்களின் பெயர்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை.

ஆனால், ஒருவர் 45 வயதான ஃபோர்ட் மெக்மரே நகரைச் சேர்ந்தவர் எனவும் மற்றொருவர் 37 வயதான லாப்ரடார் சிட்டி, நியூஃபவுண்ட்லாந்து பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கனடாவில் இடம்பெற்ற தீ விபத்தில் முதியவர் பலி

கனடாவின் நோர்த் பே தெற்கே உள்ள போர்ட் லோரிங் பகுதியில் திங்கள் காலை ஏற்பட்ட வீடொன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒரு முதியவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆர்கைல் தீயணைப்புத் துறை, நோர்த் பே அவசர மருத்துவ சேவை, மற்றும் ஒன்டாரியோ மாகாண பொலிஸார் கடந்த திங்கள் காலை 7:15 மணியளவில் லவெர்ஸ் லேன் பகுதியில் உள்ள வீட்டிற்கு அழைக்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

போர்ட் லோரிங் பகுதியைச் சேர்ந்த 80 வயது முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நபரின் சடலம், பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்னொரு நபர் உடனே அவசர மருத்துவ சேவையால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கனடா விமான விபத்து: பயணிகளுக்கு நிவாரணம்

றொறொன்ரோவில் தரையிரங்கும் போது தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளான டெல்டா விமானத்தில் இருந்து உயிர் தப்பிய பயணிகளுக்கு டெல்டா எயார் லைன்ஸ் தலா 30,000 டொலர்களை இழப்பீடு வழங்க தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், மேற்படி விமானத்தில் பயணித்த 76 பயணிகளும் டெல்டாவின் நிவாரணத்தை ஏற்றுக் கொண்டால், சுமார் 2.3 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையை பிரித்து கொடுக்க வேண்டியிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பயணிகள் தங்கள் நிவாரண தொகையை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்பது தொடர்பான விவரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

அத்தோடு, வாடிக்கையாளர்களுக்கு இந்த நிவாரணத்தை பெற எந்த நிபந்தனைகளும் இல்லை என்றும் இது உரிமைகளைப் பாதிக்காது எனவும் டெல்டா செய்தித் தொடர்பாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், மினியாபோலிஸில் இருந்து றொறொன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்த டெல்டா விமானம் 4819, திங்கள் கிழமை பிற்பகல் 2:15 மணியளவில் தரையிறங்கும் போது தீப்பிடித்து ஓடுபாதையில் தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

விபத்தின் போது, விமானத்தில் 76 பயணிகள் மற்றும் நான்கு பணியாளர்கள் இருந்ததோடு, அவர்கள் அனைவரும் உயிராபத்து இன்றி மீட்கப்பட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், விபத்தினால் 21 பேர் காயமடைந்து மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், அதில் யாருக்கும் உயிருக்கு ஆபத்தான அளவில் காயங்கள் ஏற்படவில்லை என அறிவிக்கபட்டது.

இந்த நிலையில், புதன்கிழமை காலை நிலவரப்படி, காயமடைந்த பயணிகளில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளதாக டெல்டா நிறுவனம் தெரிவித்துள்ளது.



## பனிப்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்ரிஸ்டோ மலையில் இடம்பெற்றுள்ளது.

பனிச்சரிவு குறித்த கனடிய நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவான தகவலின்படி, இந்த பனிச்சரிவு அளவு 2, காற்றால் உருவான பனிச்சரிவு என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் 2,280 மீட்டர் உயரத்தில் ஏற்பட்டுள்ளது.

பனிச்சரிவுகளின் அளவு 1 முதல் 5 வரை வகைப்படுத்தப்பட்டாலும், அளவு 2 என்றால் கூட ஒருவர் புதையவோ, காயமடையவோ, உயிரிழக்கவோ போதுமானதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபர் 120 சென்றி மீற்றர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்ட ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.





# கனடாவில் அறிமுகமாகும் முதல் அதிவேக ரயில் சேவை

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ரொறன்ரோ மற்றும் கியூபெக் சிட்டியை இணைக்கும் முதல் அதிவேக ரயில் தொடர்பில் அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில், இது கனடாவின் மிகப்பெரிய கட்டமைப்பு திட்டம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த 1000 கிலோ மீற்றர் நீளமான தொடருந்து பாதை, மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய மின்சார ரயில்களை கொண்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ரொறன்ரோ, ஓட்டாவா, மொன்றியல் மற்றும் கியூபெக் சிட்டி போன்ற முக்கிய நகரங்களை இணைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் இதை தேசிய வளர்ச்சி திட்டம் என குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டம் எதிர்கால அரசால் மாற்றப்பட வாய்ப்பிருக்கின்றது எனவே அதன் செயல்படுத்துதலுக்கான காலக்கெடுகள் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# பியர்சன் விமான நிலையத்தில் 3 ஆவது நாளாக விமானங்கள் ரத்து

கனடாவின் ரொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் மூன்றாவது நாளாகவும் விமானப் பயணங்கள் தாமதமானதாகவும் ரத்து செய்யப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

டெல்டா ஏர்லைன்ஸ் விமானம் விபத்து தொடர்பான விசாரணை இன்னும் நடைபெற்று வருகின்றமையே இதற்கு காரணமாகும்.

கடந்த திங்கள் கிழமை பிற்பகலில் 80 பேருடன் வந்த விமானம் தரையிறங்கும் போது தலைகீழாக கவிழ்ந்து விமானம்விபத்துக்குள்ளாகியிருந்தது.

இதனால் பியர்சன் விமான நிலையத்தின் ஐந்து ஓடுதளங்களில் இரண்டு மூடப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் 21 பேர் காயமடைந்தனர், இவர்களில் 19 பேர் தற்பொழுது மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர்.

கனடிய போக்குவரத்து பாதுகாப்பு குழு விபத்து தொடர்பாக விரிவான ஆய்வை நடத்தி வருவதால், விமானத்தின் எஞ்சிய பாகங்கள் குறைந்தபட்சம் 48 மணி நேரம் ஓடுதளத்தில் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால். விமான நிலையத்தில் பெரும் அளவில் தாமதங்களும் ரத்து செய்வதுமாக காணப்படுகின்றது.

புதன்கிழமை காலை 7 மணி நிலவரப்படி, பியர்சன் விமான நிலையத்தில் புறப்படும் விமானங்களில் 5 வீதம் மற்றும் வருகை தரும் விமானங்களில் 6 வீதம் ரத்து செய்யப்பட்டுள்ளன.